**பள்ளிக் கல்வி இயக்ககம்**

அனுப்புநர்
முனைவர்.க. அறிவொளி,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை –6.

பெறுநர்
1. இயக்குநர்
தொடக்கக் கல்வி இயக்குநரகம், சென்னை –6.
2. இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், சென்னை –6.
3. இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6.
4. இயக்குநர்,
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநரகம், சென்னை –6.
5. உறுப்பினர் செயலர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை –6.
6. இயக்குநர்,
பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநரகம், சென்னை –6.
7. கூடுதல் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை –6.
8. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
9. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண். 50239/அ1/இ4/2023, நாள்: 16.09.2023.

......

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ் வளர்ச்சித்துறை – சட்டமன்ற கூட்டத் தொடர் – மாண்புமிகு ஆளுநர் அவர்களால் ஆற்றிய உரையினை நடைமுறைப்படுத்திட அரசாணை வெளியிடப்பெற்றுள்ளமை – அரசாணையினை நடைமுறைப்படுத்திட அறிவுறுத்தல்கள் – சார்ந்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 47, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1)த் துறை, நாள்: 28.03.2023.
2. சென்னை – 8, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 1010/ஆ.மொ.3/2022, நாள்: 22.06.2023.

*******

பார்வை 2ல் காணும் தமிழ் வளர்ச்சி இயக்குநரவர்களின் கடிதம் மற்றும் அத்துடன் இணைத்து பெறப்பட்ட பார்வை 1ல் காணும் அரசாணை, அவற்றுள் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை தவறாமல் பின்பற்றி செயல்படும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

இணைப்பு: பார்வை(1)ல் காணும் அரசாணையின் நகல்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

நகல்
1. இணை இயக்குநர்கள், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–6.
2. இவ்வியக்கக அனைத்துப் பிரிவுகள்.

(5)

<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி - 2022-2023-ஆம் ஆண்டுக்கான மேதகு ஆளுநர் அறிவிப்பு - "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" திட்டம் - தமிழ்மொழி / தமிழ்மொழித்திட்டம் / தமிழ் ஆட்சிமொழி சட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட ஆணை மற்றும் கடிதங்கள் வாயிலாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்கள் மற்றும் கூடுதல் அறிவுறுத்தங்கள் அடங்கிய வழிகாட்டு நெறிமுறைகள் - வெளியிடுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.47 நாள் 28.03.2023

சுபகிருது, பங்குனி -14

திருவள்ளுவராண்டு 2054

<u>படிக்கப்பட்டது:</u>

1. 2022-2023-ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை எண்.46, நாள் 19.04.2022.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.1010/ ஆ.மொ.3/2022, நாள் 04 .05.2022.

******

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட 2022-2023-ஆம் ஆண்டுக்கான மேதகு ஆளுநர் உரையில் **"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற திட்டத்தை அரசு அமைப்புக்கள், தனியார் பள்ளிகள், கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் நடைமுறைப்படுத்த ஏதுவாக உரிய வழிகாட்டு நெறிமுறைகள் தமிழ் நாடு ஆட்சி மொழிச்சட்டம் 1956-இல் உருவாக்கப்படும்."** என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 1956-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு பல்வேறு துறைகள் வாயிலாக அரசாணைகள், கடிதங்கள் வாயிலாக பல்வேறு அறிவுறுத்தங்கள் அரசு அமைப்புகள் தனியார் அமைப்புகள் செயல்படுத்தும் பொருட்டு வெளியிடப்பட்டு வருகிறது என்றும்,

(த.பி.பா.)

அவ்வகையில் ஆட்சி மொழி திட்டம் மற்றும் அது தொடர்பான பணிகள் கீழ்கண்டவாறு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்:-

i) தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 1956-இல் இயற்றப்பட்டு அதன்படி தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருந்து வருகிறது.

ii) மேற்படி "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற உயரிய இலக்கை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் வளர்ச்சி தொடர்புடைய திட்டங்களை மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகம் / தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்களில் பணியாற்றும் அரசு அலுவலர்கள் செம்மையுற செயற்படுத்தவும் மற்றும் அவர்களின் பயன்பாட்டிற்கும், மேலும் பொதுமக்கள் மாணவர்கள் மற்றும் தனியார் அமைப்புகள் பயன்படுத்த ஏதுவாக பல்வேறு துறைகள் வாயிலாக அரசாணைகள், கடிதங்கள் மற்றும் குறிப்புரைகள் (ம) அறிவுரைகள் வாயிலாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

iii) ஆட்சிமொழித் திட்டப் பயிற்சிகள், கருத்தரங்குகள், ஆய்வுகள், ஆட்சிசொல் அகராதி உருவாக்கும் தொடர்பணிகள் முதலியன தமிழ் வளர்ச்சித் துறை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆட்சிமொழித் திட்டத்தை செம்மையாக செயல்படுத்தும் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

iv) தமிழ் கணினிப் பயன்பாட்டில் "தமிழ் ஒருங்குறி" எழுத்துரு பயன்படுத்த வேண்டும் என தொழில்நுட்ப துறையால் ஆணை வெளியிடப்பட்டு அதனை அனைத்து அரசு அலுவலகங்களும் பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது.

v) மாணவர்களுக்கு தமிழ்மொழி மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சு போட்டி, கலைச்சொல் உருவாக்குதல், இலக்கியத் திறன் போட்டிகள், மாணவர்களுக்கான அகராதியியல் விழிப்புணர்வுத் திட்டம், சொற்குவை, மாணவர் தூதுவர் பயிற்சித் திட்டம் மற்றும் திருக்குறள் முற்றோதல் முதலிய திட்டங்கள் தமிழ் வளர்ச்சி மற்றும் அகர முதலி திட்ட இயக்ககம் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

vi) அயல் மாநிலங்கள் மற்றும் உலகளவில் தமிழ்மொழியை பரப்பும் வகையில், தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக பல்வேறு நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், தெரிவு செய்யப்பட்ட பிறமாநில பல்கலைக்கழகங்களில் தமிழில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் பேராசிரியர் நியமனங்களுக்கு அரசின் சார்பாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல், பிறநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில், தமிழ் இருக்கைகள் அமைக்க அரசின் நல்கைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

vii) தொழிலாளர் நலத்துறையால் கடைகள் வணிக நிறுவனங்கள் தமிழில் பெயர் பலகைகள் 5:3:2 என்ற விகிதத்தில் அமைவது குறித்து உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

viii) தமிழ் வளர்ச்சித் துறை மட்டுமல்லாது பல்வேறு துறைகள் வாயிலாக தமிழ்மொழி மற்றும் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் தொடர்பாக பல்வேறு அரசாணைகள் / அறிவுறுத்தல்கள் வாயிலாக பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், மேற்படி திட்டங்களில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு வழிகாட்டுதல் நாளிதுவரை வெளியிடப்படவில்லை.

3. எனவே, ஆட்சிமொழி திட்டம் தொடர்பாக அரசு அமைப்புகள் மட்டுமின்றி தனியார் அமைப்புகள், தனியார் கடைகள், பள்ளிகள் முதலியன தொடர்பாக ஏற்கனவே அரசு கடிதங்கள் ஆணைகள் வாயிலாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்களுடன் தற்போது கூடுதலாக பின்பற்றக் கருதும் அறிவுறுத்தங்களை ஒருங்கிணைத்து ஒரு தொகுப்பு வழிகாட்டு நெறிமுறையாக வெளியிடலாம் என்று தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின், 2022-2023-ஆம் ஆண்டுக்கான மேதகு ஆளுநர் உரையில் இடம்பெற்ற "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக, மேலே பத்தி 3-இல் உள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்து ஏற்று தமிழ்மொழி / தமிழ்மொழித் திட்டம் / தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை, கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தங்கள் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தற்போது பரிந்துரைத்துள்ள

கூடுதல் அறிவுறுத்தங்கள் கீழ்காணும் தலைப்புகள் வாரியாக இணைப்புகளாக தொகுத்து வழிகாட்டு நெறிமுறை ஆணையாக வெளியிடப்படுகிறது.

I) இணைப்பு 1-இல் ஏற்கனவே அரசாணை மற்றும் கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தங்களை தவறாது பின்பற்றுமாறு தொடர்புடைய அரசு மற்றும் தனியார் அமைப்புகள் மீள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

II) இணைப்பு 2-இல் தற்போது பரிந்துரைக்கப்படும் கூடுதல் விவரங்கள் அடங்கிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு தொடர்புடைய அரசு மற்றும் தனியார் அமைப்புகள் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

III) இணைப்பு 3-இல் தற்போது பரிந்துரைக்கப்படும் இதர வழிகாட்டு நெறிமுறைகளை தொடர்புடைய அரசுத் துறைகள் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.செல்வராஜ்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
அனைத்து கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/
முதன்மை செயலாளர்கள் / செயலாளர்கள்
தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து துறை தலைவர்கள்/வாரியங்கள்/கழகங்கள்,
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள்,
அனைத்து மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்கள்/
உதவி இயக்குநர்கள்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அ.அ.நாகேந்திரன் 28/3/23
பிரிவு அலுவலர்
28/3/2023

<u>அரசாணை (நிலை) எண்.47 , தமிழ் வளர்ச்சி (ம)செய்தி (த.வ.1.1)த் துறை,</u>

<u>நாள் 28 .03.2023-இன் இணைப்பு - 1</u>

அ) (i) அரசு அமைப்புகள் தொடர்பாக ஏற்கனவே அரசாணை மற்றும் கடிதங்களின் வாயிலாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்களை தொடர்புடைய துறைகள் பின்பற்றுதல்:-

| வ. எண் | அரசாணைகள் / அரசு கடிதங்கள் விவரம் | அறிவுறுத்தங்கள்/ வழிகாட்டுதல் | தொடர்புடைய துறை /அமைப்பு |
|---|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண்.1609, பொது (தமிழ் வளர்ச்சி-1)த் துறை, நாள் 02.08.1968 | பொது மக்களிடமிருந்து தமிழில் வருகின்ற கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுதுவதுடன் அவை பற்றிய குறிப்புகள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 2. | அரசாணை (நிலை) எண்.2070, கல்வி (தமிழ் வளர்ச்சி)த் துறை, நாள் 02.12.1971 | அனைத்து அரசு அலுவகங்களிலும் விலக்கு அளிக்கப்பட்ட இனங்கள் நீங்கலாக பிற அனைத்து பொருள்களிலும் தமிழ் மொழியிலேயே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 3. | அரசாணை எண்.1134, கல்வி (தமிழ் வளர்ச்சி)த் துறை, நாள் 21.06.1978. | அரசுப் பணியாளர்கள் அனைத்து இனங்களிலும் தமிழில் மட்டுமே கையொப்பமிட வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 4. | அரசாணை (நிலை) எண்.91, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (பணி-எ)த் துறை, நாள் 03.02.1981 | தமிழ்நாட்டில் உள்ள அரசு அலுவலகங்களில் வெளியிடப்படும் கடிதங்கள் அலுவலக ஆணைகள், செய்தி மற்றும் ஏனைய வெளியீடுகளிலும் கிறிஸ்துவ ஆண்டுடன் தமிழ் ஆண்டு திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டையும் | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 5. | அரசாணை (நிலை) எண்.371, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள் 31.10.1986. | அனைத்து நடவடிக்கைகள் / பதிவேடுகள் தமிழில் அமைய வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 6. | அரசாணை (நிலை) எண்.349, தமிழ் வளர்ச்சி (ம) பண்பாட்டுத் துறை, நாள் 14.10.1987 | அரசின் துறைத் தலைமை மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பெயர்ப்பலகைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முறையே 5:3 விகிதத்தில் அமைக்கப்பெற வேண்டும். மேற்காணும் அலுவலகத்தை தவிர பிற அலுவலகங்களில் பெயர்பலகைகள் தமிழில் மட்டுமே அமைக்கப்பெற வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 7. | அரசாணை (நிலை) எண்.182, தமிழ் வளர்ச்சி (ம) பண்பாட்டுத் துறை, நாள் 27.06.1989 | அரசு தலைமைச் செயலகத் துறைகள் ஆங்கிலத்தில் ஆணைகள் வெளியிடும் நேர்வுகளில் இனி ஆங்கிலத்துடன் தமிழிலும் அவ்வாணைகள் வெளியிடப்பெற வேண்டும். | அனைத்து தலைமைச் செயலகத் துறைகள் |
| 8. | அரசாணை (நிலை) எண். 431, தமிழ் வளர்ச்சி, பண்பாடு (ம) அறநிலைய(தவ1.1)த் துறை, நாள் 16.09.1998 | அரசு . அலுவலர்களும், பணியாளர்களும் தங்கள் பெயரின் முதல் எழுத்தை (தந்தை, தாய், ஊர், பெயர்களைக் குறிப்பிடும் எழுத்துகள்) எழுதும்போது ஆங்கில எழுத்தினை பயன்படுத்தாமல் சரியான தமிழ் எழுத்தைப் பயன்படுத்த வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 9. | அரசுக் கடித எண். 3010/தவ1.1/2000, தமிழ் வளர்ச்சி, பண்பாடு (ம) அறநிலைய(தவ1.1)த் துறை, நாள் 22.03.2000 | தமிழக அரசின் துறைகள், தலைமை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களில் நாள்தோறும் திருக்குறளை பொருளுடனும் மற்றும் ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லையும் எழுதி வைக்க வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் |
| 10. | அரசாணை (நிலை) எண்.41, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி(தவ1.1)த் துறை, நாள் 20.02.2008. | • சுற்றாணைக் குறிப்புகள் தமிழிலேயே இருக்கவேண்டும்.<br>• துறைத் தலைமை அலுவலகங்களிலிருந்து அரசு மற்றும் பிற அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கருத்துரைகள் தமிழிலேயே இருக்க வேண்டும்.<br>• துறைத் தலைமை அலுவலகப் பயன்பாட்டிலுள்ள கணினிகள் அனைத்திலும் தமிழ் மென்பொருள் பொருத்தவேண்டும்.<br>• துறைத் தலைமை அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் படிவங்கள் முடிந்தவரை தமிழிலேயே இருக்க வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 11. | அரசாணை (நிலை) எண்.70, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எ)த் துறை, நாள் 09.04.2008. | அரசு ஆணை, தமிழ்நாடு அரசிதழ், அரசுக் கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் கிருத்துவ ஆண்டுக்கு நிகராகத் தமிழ்த் திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவராண்டு ஆகியன மட்டுமே எழுதப்படல் வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 12. | அரசாணை (நிலை) எண்.29, தகவல் தொழில்நுட்பவியல்த் துறை, நாள் 23.06.2010. | தமிழ் இணைய கல்வி கழகத்தால் உருவாக்கப்பட்ட தமிழ் ஒருங்குறி எழுத்துருவை அரசின் அலுவல் பயன்பாட்டில் பயன்படுத்த வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |
| 13. | அரசாணை (நிலை) எண். 78, தவ(ம)செய்தி (தவ2.1)த் துறை, நாள் 13.03.2013. | தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. | மாவட்ட நிலை அலுவலகங்கள் |
| 14. | அரசுக் கடித எண்.8212/தகவல் தொழில்நுட்ப துறை/2017, நாள் 11.07.2017 மற்றும் கடித எண்.549146/ த.தொ.நு (பி.2)/ 2020, நாள் 26.08.2020. | தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் ஒருங்குறி எழுத்துருக்களை அனைத்து அரசுத் துறைகளும் தங்களது அன்றாட அலுவல் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துமாறு அறிவுறுத்த வேண்டும். | அனைத்து துறைகள் / அரசு அலுவலகங்கள் |

**ii) ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பாக ஆய்வுப் பணிகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள்:-**

| வ. எண் | பொருள் | அறிவுறுத்தங்கள் | தொடர்புடைய துறை / அமைப்பு |
|---|---|---|---|
| 1. | ஆட்சிமொழித் திட்ட செயலாக்க ஆய்வுப் பணிகள் | அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அவர்களால் தலைமைச் செயலகத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் மற்றும் மண்டல துணை இயக்குநர்கள் வாயிலாக துறைத் தலைமை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வாரியம், கழகம் மற்றும் அரசு | தலைமைச் செயலகம், துறைத் தலைமை, வாரியம், கழகம் மற்றும் அரசு அலுவலகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகங்களில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. | |
| 2. | அனைத்து மாவட்டங்களில் ஆட்சிமொழித் திட்ட செயலாக்க ஆய்வுப் பயிலரங்கம் | அனைத்து மாவட்டங்களிலுள்ள அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைய 2 நாள்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. | அனைத்து மாவட்ட அலுவலகங்கள் |
| 3. | ஆட்சிமொழிக் கருத்தரங்கம் | அலுவலக செயற்பாடுகள் முழுமையாக தமிழில் நடைபெற அனைத்து மாவட்டங்களிலுள்ள அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் நடத்தப்படுகிறது. | அனைத்து மாவட்ட அலுவலகங்கள் |
| 4. | சென்னை மாவட்ட ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி | சென்னை மாவட்டத்தில் அரசுத் துறை, வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் குறித்து ஆண்டுதோறும் 5 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. | சென்னை மாவட்ட அரசு துறை, வாரியங்கள் மற்றும் கழகங்கள் |
| 5. | ஆட்சிமொழிச் சட்ட வாரம் | தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவுகூரும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சி மொழிச் சட்ட வாரம் ஒரு வார காலம் பல்வேறு பொருண்மைகளில் நடத்தப் பெறுகிறது. | அனைத்து மாவட்ட அரசு துறை மற்றும் கழகங்கள் |

ஆ) அரசு மற்றும் தனியார் பள்ளி / கல்லூரிகள் மாணவர்கள் தொடர்பாக ஏற்கனவே அரசாணை மற்றும் கடிதங்களின் வாயிலாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்களை பின்பற்றுதல்:-

| வ. எண் | பொருள் | அறிவுறுத்தங்கள் | தொடர்புடைய துறை / அமைப்பு |
|---|---|---|---|
| 1. | அரசாணை (ப) எண்.67, தவ.(ம) செய்தி(த.வ.1.1)த் துறை, நாள் 27.06.2019 | தமிழில் பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் கவிதை எழுதும் திறனையும் மாணவப் பருவத்திலேயே வளர்க்கவும் தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கிலும் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களிடையே கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. | தமிழ் வளர்ச்சித் துறை, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித்துறை, பள்ளி / கல்லூரி மாணவர்கள் |
| 2. | அரசாணை (நிலை) எண். 113, தவ(ம) செய்தி(தவ1.1)த் துறை, நாள் 18.08.2022 | தமிழ்நாட்டில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் (சுமார் 100 கல்லூரிகள்) ஆகியவற்றில் மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்து அதன் வாயிலாக அந்தந்தக் கல்லூரிகளில் மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் | தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் உயர்கல்வித் துறை. (கல்லூரி மாணவர்கள்) |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுதோறும் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது. | |
| 3. | அரசாணை (நிலை) எண். 123, தவ(ம) செய்தி (தவ1.1)த் துறை, நாள் 25.08.2022 | அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ்மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்தும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6,218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது. | தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை. (பள்ளி மாணவர்கள்) |
| 4. | அரசாணை(ப) எண். 88, தவ(ம) செய்தி (தவ1.1)த் துறை, நாள் 28.06.2022 | இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை மற்றும் தமிழ் இலக்கிய வினாடி வினா நடத்துதல் | தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பள்ளி மாணவர்கள் |
| 5. | அரசாணை(நிலை) எண். 140, தவ(ம)செய்தி(தவ1.1)த் துறை, நாள் 02.11.2021 | பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் தமிழில் பெயர் எழுதும்போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுத வேண்டும். | தமிழ் வளர்ச்சித் துறை, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறை. (பள்ளி / கல்லூரி மாணவர்கள்) |

| | | | |
|---|---|---|---|
| 6. | அரசாணை(நிலை) எண்.152, தவ(ம)செய்தி (தவ1.2)த் துறை, நாள் 17.11.2021 | திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவர்களுக்கு பரிசுத்தொகை ரூ.15,000/- வழங்கப்படுகிறது. | தமிழ் வளர்ச்சித் துறை, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறை. (பள்ளி/ கல்லூரி மாணவர்கள்) |
| 7 | அரசாணை (நிலை) எண்.23, தவ (ம) செய்தி(தவ2)த் துறை, நாள் 11.02.2019 | செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் வாயிலாக சொற்குவை மாணவர் பயிற்சித் திட்டம் | அகர முதலி திட்ட இயக்ககம், சென்னை |

**இ) தனியார் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் தொடர்பாக ஏற்கனவே அரசாணை மற்றும் கடிதங்களின் வாயிலாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்களை பின்பற்றுதல்:-**

| வ. எண் | அரசாணை / அரசுக் கடிதம் | பொருள் | தொடர்புடைய துறை / அமைப்பு |
|---|---|---|---|
| 1 | அரசாணை(நிலை) எண். 1541, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 29.07.1982 | தமிழ்நாட்டில் செயல்படும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் - 5:3:2 என்ற விகிதத்தில், தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும் என அறிவிக்கை வெளியிட்டுள்ளது. | தொழிலாளர் நலத் துறை |

(17)

| | | | |
|---|---|---|---|
| 2 | அரசாணை(ப) எண்.4, தவ(ம)செய்தி(தவ1.1)த் துறை. நாள் 07.01.2022 | வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், குடியிருப்பு அடுக்ககங்களுக்கு தமிழில் பெயர் அமைந்திருப்பது ஊக்குவித்து அரசாணை வெளியிடப்பட்டது. | தமிழ் வளர்ச்சித் துறை / வணிகவரித் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை |

இரா. செல்வராஜ்,
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

அ.அ.நாகேந்திரன் 28/3/23
பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண் 47, தமிழ் வளர்ச்சி (ம)செய்தி (த.வ.1.1)த் துறை, நாள் 28.03.2023-இன் இணைப்பு-2

## அ) அரசு அமைப்புகள் பின்பற்ற வேண்டிய தமிழ் / தமிழ் ஆட்சிமொழி திட்டம் தொடர்பான கூடுதல் அறிவுறுத்தங்கள்:-

| வரிசை எண் | பொருள் / அறிவுறுத்தங்கள் | நடைமுறைப் படுத்தும் அமைப்புகள் |
|---|---|---|
| 1. | துறைத் தலைமை / சார்நிலை அலுவலகங்களில் ஆங்கிலத்திலுள்ள **படிவங்கள் காலமுறை அறிக்கைப் படிவங்கள்** தமிழில் விரைந்து **மொழி பெயர்க்கப்பட வேண்டும்.** மொழி பெயர்க்கப்படும் படிவம் பொருள் மாறுபடாமல் இருக்கும் வகையில் உறுதி செய்து கொள்ள வேண்டும். | அனைத்து துறைகள் |
| 2. | துறைத் தலைமை அலுவலர் தம் அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களை **நிருவாக ஆய்வு மேற்கொள்ளும்போது** தத்தம் நிருவாக ஆய்வுப்பணிகளுடன் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க **வினாப்பட்டி அடிப்படையிலும்** ஆய்வு மேற்கொண்டு குறிப்புரைகள் வழங்க வேண்டும். விதிவிலக்கு இனங்கள் தவிர்த்து பிற அனைத்தும் **முழுமையாகத் தமிழில்** அமைந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். | அனைத்து துறைகள் |
| 3. | அனைத்துத் துறைகளின் சார்பில் உள்ள வலைத்தளத்தில் இடம் பெற்றிருக்கும் விவரங்கள் **முதலில் தமிழிலும்** அதற்கடுத்து ஆங்கிலத்திலும் இடம்பெற ஏதுவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | அனைத்து துறைகள் |
| 4. | அனைத்துத் துறைகளிலும் பொதுமக்கள் பயன்பெறும் திட்டங்களுக்கு நேரலை வாயிலாக (Online) பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள், விதிமுறைகள், வழிமுறைகள், விதிவிலக்கு இனங்கள் தவிர்த்து பிற அனைத்தும் **தமிழிலேயே அமைய** உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், நேரலையில் | அனைத்து துறைகள் |

| | | |
|---|---|---|
| | பதிவிடப்படும் மறுமொழிகள் தமிழிலேயே பதிவிடவும் உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட துறைகள் மேற்கொள்ள வேண்டும். | |
| 5. | எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக தமிழில் அச்சிடப்படும் அனைத்துப் பணிகளும் தமிழ் ஒருங்குறி எழுத்துருவைப் பயன்படுத்தியே அச்சிடப்பட வேண்டும். அவ்வகையில் அனைத்துத் துறைகளிலிருந்தும் எழுதுபொருள் அச்சுத்துறைக்கு அச்சிட அனுப்பப்பெறும் அனைத்தும் தமிழ் ஒருங்குறி எழுத்துருவில் மட்டுமே இருத்தல் வேண்டும் எனச் சுற்றறிக்கை எழுதுபொருள் அச்சுத்துறையால் அனுப்பப் பெற வேண்டும். | எழுதுபொருள் அச்சுத் துறை (மற்றும்) அனைத்து துறைகள் |
| 6. | அரசு துறைகளில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் இதுவரை உருவாக்கப்படவில்லை எனில் அச்சொற்களை சம்பந்தப்பட்ட துறை தொகுத்து செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநருக்கு அனுப்பி தங்கள் துறைக்கென்று துறை சிறப்புச் சொல் துணை அகராதியை உருவாக்கிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக. அனைத்துத் துறைகளுக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பி ஆங்கிலச் சொற்களைத் திரட்டி தமிழில் கலைச்சொல் உருவாக்கி துறை சிறப்புச் சொல் துணை அகராதியை உருவாக்கித் தர வேண்டும். இதன் பொருட்டு, தமிழ் வளர்ச்சித் துறையில் முன்னரே வெளியிடப்பட்டுள்ள சிறப்புச் சொல் துணையகராதியைப் பெற்று அதில் இல்லாத சொற்களைத் தொகுத்து திருத்திய பதிப்பாக ஒருங்கிணைத்து வெளியிடப்பெற வேண்டும். | அனைத்து துறைகள் |
| 7. | அரசின் பல்வேறு துறைகள் அமைப்புகள் பல்கலைகழகம் சார்பாக நடத்தப்படும் தமிழ் | |

| | | |
|---|---|---|
| | இலக்கிய விழா, மற்றும் பண்பாட்டு விழாக்களில் தமிழ் அறிஞர்கள் மூலம் நடத்தப்படும் சொற்பொழிவுகளில் வாலாயமான சொற்பொழிவு பொருண்மைகளுடன் தமிழ் மொழி / தமிழ் ஆட்சிமொழி சட்டம் மற்றும் அது தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களின் நடவடிக்கை தொடர்பான பொருண்மைகளை பொது மக்கள் அறியும் வண்ணம் இடம்பெற செய்ய உரிய ஆவணம் செய்ய தொடர்புடைய துறைகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். | தொடர்புடைய துறைகள் |
| 8. | மேற்குறிப்பிட்ட பொருண்மைகளுடன் அரசு மற்றும் அரசு சார் அமைப்புகள் தொடர்பாக அவ்வப்போது சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக வெளியிடப்படும் தமிழ்மொழி / ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பான வழிகாட்டுதல்களை மேற்படி அமைப்புகள் தவறாது கடைபிடிக்க வேண்டும். | அனைத்து துறைகள் |
| 9. | பொது மக்களிடமிருந்து பெறப்படும் முதலமைச்சர் தனிப்பிரிவு விண்ணப்பம். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மற்றும் உதவித்தொகைகள் மற்றும் பிற கோரிகைகள் தொடர்பான விண்ணப்பங்கள் தொடர்பான மறு மொழிகள் விதி விலக்கு இனங்கள் தவிர்த்து தமிழியிலேயே அளிக்க வேண்டும். | அனைத்து துறைகள் |

**ஆ) அரசு/தனியார் பள்ளி மற்றும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய தமிழ் / தமிழ் ஆட்சிமொழி திட்டம் தொடர்பான கூடுதல் அறிவுறுத்தங்கள்:-**

| வரிசை எண் | பொருள் / அறிவுறுத்தங்கள் | நடைமுறைப்படுத்தும் துறைகள் |
|---|---|---|
| 1. | பள்ளி / கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடையே இளம் பருவத்திலேயே தமிழ் மீது பற்றையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் | பள்ளி கல்வித்துறை, உயர் கல்வித்துறை |

| | | |
|---|---|---|
| | தொடர்பான கேள்விகள்/ பொருண்மைகள் இடம்பெற உரிய ஆவன செய்யப்பட வேண்டும். | |
| 5. | மேலே தெரிவிக்கப்பட்ட பொருண்மைகளுடன் அரசு / தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தமிழ் (ம) தமிழ்மொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுரைகளை மாணவர்களும், ஆசிரியர்களும் தவறாது கடைபிடித்து பயனடையவும், இது தொடர்பாக பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறைகள் இத்திட்டம் செயல் படுத்தப்படுவதை கண்காணித்து உறுதிப்படுத்த வேண்டும் | பள்ளி கல்வித்துறை, உயர் கல்வித்துறை மற்றும் தொடர்புடைய துறைகள் |

**இ) தனியார் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய தமிழ் / தமிழ் ஆட்சிமொழி திட்டம் தொடர்பான கூடுதல் அறிவுறுத்தங்கள்:-**

| வரிசை எண் | பொருள் / அறிவுறுத்தங்கள் | நடைமுறைப்படுத்தும் துறைகள் |
|---|---|---|
| 1. | ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணை புரியும் வகையில், தமிழ் வளர்ச்சித் துறையில் 1997ஆம் ஆண்டு வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ் என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு, தற்போது நவீன உலகத்திற்கு ஏற்றவாறு வணிக நிறுவனங்கள், கடைகள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள், உணவகங்கள் ஆகியவற்றின் பெயர்கள் புதிய புதிய வடிவில் ஆங்கிலத்தில் உள்ளன. இவ்வாறான ஆங்கிலப் பெயர்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ப்பெயர் கலைச்சொற்களை | தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் |

| | | |
|---|---|---|
| | உருவாக்கி திருத்திய கையேடு ஒன்று தயாரிக்கப்படும். | |
| 2. | மாநிலத்தில் இயங்கும் வணிக நிறுவனங்கள், கடைகள், வணிக வளாகங்கள் முதலியன அரசாணையில் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தங்கள் அன்றி, தாமே முன்வந்து தத்தம் கடைகள் / நிறுவனங்களின் பெயரை அரசாணையில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, 5:3:2 என்ற வீதத்தில் அமையுமாறும், மேலும் பற்றுச்சீட்டுகளின் விவரங்கள் தமிழில் இடம்பெறச் செய்வதும் சாலச்சிறந்ததாகக் கருதப்படுகிறது. | தொழிலாளர் நலத்துறை மற்றும் வணிகவரித்துறை |
| 3. | அரசுத் துறைகள் மட்டுமின்றி தனியார் துறைகள், ஊடகத் துறைகள், பதிப்பகங்கள் என அனைத்துத் துறைகளும் தமிழ்ப் பயன்பாட்டில் ஒரே நேர்க் கோட்டில் செல்லும் வகையில், கணினிப் பயன்பாட்டில் "தமிழ் ஒருங்குறி" எழுத்துருவை பயன்படுத்திடும் வகையில், ஊடகத் துறையினரை செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் / தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் வாயிலாகச் உரிய அறிவுறுத்தங்களை அனுப்பி கேட்டுக் கொள்ளலாம். | இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை |
| 4. | தமிழ் மொழியை காப்பதில் பள்ளிகல்லூரிகளுக்கு அடுத்து ஊடக துறையின் செய்தி (ம) காட்சி பங்களிப்பு மிக முக்கியம் என்பதால் தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் செய்தி வாசிப்பு, நேர்காணல், விவாதங்கள், பட்டிமன்றங்கள் முதலிய நிகழ்வுகளில் தமிழ் மொழியை இலக்கண | இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை (ம) அனைத்து ஊடகங்கள் |

| | | |
|---|---|---|
| | பிழையின்றி பேசுதல்/ உரையாடுதல் அதுபோல் செய்திதாள்களில் இலக்கண பிழையின்றியும் அச்சிடுதல் மற்றும் தமிழ் ஒருங்குறி எழுத்துருக்களை பயன்படுத்துவது முதலியன அவர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும் என்பதை உணர்ந்து செயல்படுவது. மேலும் இது தொடர்பாக உரிய அறிவுறுத்தங்களை செய்தி மக்கள் தொடர்புத்துறை வழங்குதல். | |
| 5. | மாநிலத்தில் இயங்கும் அரசு பொதுத்துறை / தனியார்துறை வங்கிகளில் பயன்படுத்தப்படும் பட்டிகளில் எளிய பாமர மக்கள் பயன்படுத்தும் வகையில். ஆங்கில மொழியோடு தமிழ்மொழியும் இடம்பெறச் செய்ய உரிய நடவடிக்கையை அந்தந்த வங்கிகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளலாம். | மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் |
| 6. | கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தமிழ்ப் பயன்பாட்டை நடைமுறைப்படுத்த ஏதுவாக அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்களை மேற்படி அமைப்புகள் செயல்படுத்துவதை கண்காணித்து உறுதிப்படுத்த வேண்டும். | தொழிலாளர் நலத்துறை மற்றும் வணிகவரித்துறை |

இரா. செல்வராஜ்.
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண்.47, தமிழ் வளர்ச்சி (ம)செய்தி (த.வ.1.1)த் துறை, நாள் 28 .03.2023-இன் இணைப்பு-3

இதர விவரங்கள் அடங்கிய கூடுதல் அறிவுறுத்தங்கள்:-

| வ. எண் | பொருள் / அறிவுறுத்தங்கள் | நடைமுறைப்படுத்தும் துறைகள் |
|---|---|---|
| 1. | தமிழ் ஆட்சிமொழி சட்டம் தொடர்பான அரசாணை மற்றும் அறிவுறுத்தங்களில் கூறப்பட்ட வழிகாட்டுதல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து வரும் கோரிக்கைகள் மற்றும் குறைகளைவு மீது சம்பந்தப்பட்ட துறைகளே உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளலாம். | அனைத்து துறைகள் |
| 2. | அரசு துறைத் தலைவர்கள், உயரதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள் முதலியோர் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை மேலும் மேம்படுத்துவது தொடர்பாக, பல்வேறு ஆய்வுக் கூட்டங்களில் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்து தமிழ் வளர்ச்சி இயக்குநர் உரிய ஆய்வு செய்து கூடுதல் வழிகாட்டு விவரங்களாக தயாரித்து அரசுக்கு அனுப்பக் கோரலாம். அவ்வாறு, தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்படும் மேற்படி விவரங்களை உரிய மீள ஆய்வு செய்து ஒப்புதல் பெற்று நடைமுறையில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் பின்னிணைப்பாக அவ்வப்போது சேர்க்கலாம். | தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை |
| 3. | மேற்படி பத்தி 7-இல் உள்ள பொருண்மைகள் தொடர்பாக, அப்பொருண்மைக்கு எதிரே | அனைத்து துறைகள் |

| | | |
|---|---|---|
| | குறிப்பிடப்பட்ட துறைகள் / அமைப்புகள் மேற்குறிப்பிட்ட அறிவுரைகளைத் தவறாது பின்பற்றி நிறைவேற்ற அறிவுறுத்தலாம். மேலும், இந்நேர்வில், தமிழ் மொழி / தமிழ் ஆட்சிமொழி தொடர்பான திட்டங்கள் மற்றும் அறிவுறுத்தங்களை முழு அளவில் செயல்படுத்தும் பணி அனைத்து துறைகளின் பொறுப்பும் கடமையும் ஆகும் என்பதால், மேற்படி தற்போது வெளியிடப்படும் வழிகாட்டி நெறிமுறைகளில் கூறப்படும் அறிவுரைகளை அந்தந்த துறைகளின் கட்டுப்பாட்டில் வரும் அரசு அமைப்புகள்/ நிறுவனங்கள் செயல்படுத்த ஏதுவாக மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்ட அறிவுரைகளுக்கிணங்க, உரிய செயலாணைகள் மற்றும் அறிவுறுத்தங்களை அந்தந்த துறைத் தலைவர்கள் வெளியிடுமாறும், மேலும் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளலாம். | |

இரா. செல்வராஜ்,
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

அ.அ. தாமோதரன் 28/3/23
பிரிவு அலுவலர்